Arimaa Nokku Journal
(UGC Care Group-I Journal)
ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

# பாரதியார் கண்ட கனவு

POET BHARATHIAR'S DREAM

**முனைவர் க.ஜெகதீஸ்வரி**,
உதவிப்பேராசிரியர்
கே.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி,
சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - 041 015

**சுருக்கம்**

சுதந்திரப் போராட்ட வீரர் கவிஞர் பாரதியாரைப் பற்றி கேட்டபோது, அவரது பாடல்களையும் பாடல் வரிகளையும் மக்கள் அடையாளம் கண்டுகொள்ள முடியும். அவரது பாடல் வரிகளைப் பற்றி கேள்விப்பட்டபோது பிரிட்டிஷ் அரசாங்கமும் பயந்து பீதியடைந்தார், மேலும் அவர் சுதந்திரத்திற்கான நமது தேசம் பற்றி கனவு கண்டார், அதாவது அவர் தனது பாடல் வரிகள் மூலம் நம் தேசத்தின் சுதந்திரத்திற்கு எப்போதும் குரல் கொடுத்தார், குறிப்பாக பெண்கள் அதிகாரம், அவர் எப்போதும் ஆதரவளித்து முன்னுரிமை அளித்தார். பெண்கள் மேம்பாட்டிற்காக, சாதி உணர்வு மற்றும் சமூகங்களுக்கு எதிராக அவர் போராடினார், ஏனென்றால் அந்த நாட்களில், இன்றும் நம் தேசத்தில் பல சாதி உணர்வுகள் உள்ளன, நம் தேசத்தில் பல வகையான மக்கள் இருக்கலாம். பல மத மற்றும் மொழிகள் உள்ளன, மேலும் நாம் பெருமைப்படுகிறோம். இந்தியன். அவர் எப்போதும் நமது தேசத்துக்கான சுதந்திரத்திற்கு எதிராக போராடினார். சுதந்திரம் நமது உரிமைகள், சுதந்திரம் நமது கண்ணியம், நமது சுதந்திர இலக்கை அடைவதற்காக நாங்கள் தொடர்ந்து போராடுகிறோம். மேலும் பெண் அடிமைத்தனத்திற்கு எதிராக போராடி, பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், அனைவருக்கும் குறிப்பாக பெண்களுக்கு கல்வி பெறும் உரிமை போன்றவற்றிற்கு ஆதரவு அளித்து. நமது தேசத்திற்கு இன்னும் அதிக வழிகாட்டுதலாக அவரது பங்களிப்பு,

## முன்னுரை

மகாகவி பாரதியார் என்றால் நமதுக்கு கத்தியின்றி, இரத்தமின்றி உணர்ச்சி பெங்கும் பாடல்களின் மூலம் வெள்ளையர்களை நாட்டை விரட்டும் அகிம்சை ஆயுதமாக செயல்பட்டார் என்பது குறிப்பிடதக்கது, சுதந்திரம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவோம் என்ற கனவோடு மற்றும் பல்வேறு

கனவுகள் அவருக்குண்டு, அதாவது பெண்ணடிமையை போக்கவெண்டும், சாதி மதம் அறவே ஒரிக்கப்பட வெண்டும், சுதந்திர தாகம், விடுதலை மற்றும் ஞானப்படல்களில் அச்சமில்லை அச்சமில்லை, சமுக பாடல்களாக, புதுப்பெண், பெண்கள் விடுதலைக்கும்மி, நாட்டுக் கல்வி, என்ற பல்வெறு கனவுகள் கொண்டவராக வாழ்ந்து மறைந்தாலும், அவரின் பாடல் வரிகள் இன்றும் நம்மோடு வாழ்ந்துக் கொண்டிருக்கின்றன. சுதந்திரம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே திருவோம் என்றும் ஆயிரம் உண்டு இங்கு சாதி, இதில் அன்னியருக்கென்ன நீதி என்று எட்டையபுரத்திலிருந்து புறப்பட்ட மகாகவி பாரதியார் அவர்களுக்கு தனது தாய் நாட்டை பற்றி பல்வேறு கனவுகள் உண்டு சுதந்திர கனவு. பெண்களுக்கு அதிகாரமளித்தல், மகளிர் சமுதாய மற்றும் பொருளாதார மேம்பாடு அதாவது பெறச் செய்தல், வாழும் கலை மேற்பாட்டுத் திட்டங்கள், பொருளாதர சுதந்திரம். பெண் குழந்தைக்கு கல்வி, கல்வி மூலம் மகளிருக்கு அதிகாரமளித்தல், போன்ற பல்வேறு கனவுகளின் சாரம்சத்தை காணுவோம்.

**சுதந்திர தாகம்**

- விடுதலை வேள்வி
- பெண்களுக்கு அதிகாரமளித்தல்
- புதுமைப்பெண்
- பெண்கள் விடுதலைக்கும்மி

**பாரதியின் நாட்டுப்பற்று**

**பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள் பாரத நாடு**
**ஞானத்தி லேபர மோனத்திலெ - உயர்**
**மானத்தி லேஅன்ன தானத்திலெ**
**கானத்தி லேஅமு தாக நிறைந்த**
**கவிதையி லேஉயர் நாடு - இந்தப்**
**தீரத்தி லேபடை வீரத்திலே - நெஞ்சில்**
**ஈரத்தி லேஉப காரத்திலே**
**சாரத்தி லேமிகு சாத்திரங்கண்டு**
**தருவதி லேஉயர் நாடு - இந்தப்**
**ஆக்கத்தி லேதொரில் ஊக்கத்திலே-புய**
**வீக்கத்தி லேஉயர் நொக்கத்திலே**
**காக்கத் திறல்கொண்ட மல்லர்தம் சேனைக்**
**கடலினி லேஉயர் நாடு இந்தக்**

**யாகத்தி லேதவ வேகத்திலெ - தனி**
**யோகத்தி லேபல போகத்திலே**
**ஆகத்தி லே தெய்வ பக்தி கொண்டார்தம்**
**அருளினி லேஉயர் நாடு - இந்தப்**

உலகத்தில் உள்ள அத்தனை நாடுகளை காட்டிலும் நம்நாடு தான் சிறந்த நாடு, எங்கள் நாட்டில் வளம், செல்வ செழிப்பு வேறு எந்த நாட்டிலும் இல்லை, அது மட்டுமல்ல எங்கள் நாட்டில் உள்ள மக்கள் எல்லாம் அறிவில் சிறந்தவர்களாகவும், தன்மானத்தை உயிருக்கு ஒப்பாகவும் கொண்டவர்கள், பசிஎன்று தன்னை வருபவர்களுக்கும் இல்லையென்று கூறாமல் அன்னத்தோடு அன்மையும் பரிமாறும் குணம் கொண்டவர்கள், அதோடு கற்பனை வளம் சிந்தனையை கொண்டவர்கள், மேலும் போர் என்று வந்தால் அதை துணிச்சலோடு எதிர்கொண்டு எதையும் வெற்றிக் கொள்ளும் ஆற்றல் காட்டு வளம் என்று சொல்லிக் கொண்டே போகலாம் என்று தாய்நாட்டின் பெருமையை கூறுகிறார், நமது முண்டாசு கவிஞர் பாரதி. உடையவர்கள், மலையும், அழகிய காடுகளையும் கொண்ட எங்கள் நாடு என்று தன் பிறந்த நாட்டை விட இந்த அண்டத்தில் நீர் வளம், நிலவளம், கனிம வளம் ,காட்டு வளம் என்று சொல்லிக் கொண்டெ போகலாம் என்று தாய்நாட்டின் பெருமையை கூறுகிறார் நமது முண்டாசு கவிஞர் பாரதி.

சுதந்திரத்தாகம் மகாகவி பாரதி பிறப்பு முதல் இறப்பு வரை சுதந்திரப் தாகத்தை நேசித்தவன் அவனின் பாடல் வரிகள் பாமர மக்களின் சுதந்திர உணர்ச்சிகளை தட்டி எழுப்பக்குடியவை, அவ்வாறு பாடல்களின் கீர்க்கண்டவாறு :-

**என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்**
**என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்**
**என்றெம தன்னை கை விலங்குகள் போகும்,**
**என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்**

காலம்காலமாக அடிமைபட்டுக் கொண்டிருக்கும் நாம் எப்போது சுதந்திர காற்றை சுவாசிப்பொம், அடிமை வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைப்பது எப்போது காக்கை குருவிகளைப் பொல் நாம் எப்பொது சுதந்திரமாக பாழ திரிவொம் என்று

கூட மனவேதனையில் வாழ்ந்து மறைந்தாலும் அவனுடைய பாடல்களில் இருக்கும் சுதந்திர வீர உணாவுகள் இன்றும் நம்மை பிரமிக்க வைக்கின்றன. புனித தாய்மண்ணில் பிறந்து வளர்ந்த நாட்கள் பிமியில் நடமாடுவதற்கு

சுதந்திரமில்லை எங்கள் கைகளை கட்டிபோடடிருக்கும் வெள்ளையனின் அடிமை விலங்குகள் எப்போது அவிழ்த்து விடப்படும், அதுவரை நாம் ஓயக்வுடாது என்று தன் பாடல் வரிகளால் முறுக்கு மீசைகளை டிகாண்டு நறுக்டிகான்று வீர பாடல்களால் அன்றை ஆ"கிலெயெ பெரரசு அதிர்ந்து பொனது.

**சுதந்திரம் எனது பிறப்புரிமை**
**அதை அடைந்தே தீறுவோன்**

உலகத்தில் வாவும் அனைத்து உயிர்களும் சிவசக்தி ஆசியுடன் சுற்றித் திரியும் வரத்தை கொடுத்தாள் அதை இடையில் வந்தவன் தட்டி பறித்தான் என்று ஏக்கத்தோடு மெலே கண்ட வரிகளின் வாயிலாக சுயோட்சை எங்கள் உடன்

பிறந்தது அதை தடுப்பதற்கோ, தட்டிப் பறிப்பதற்கே இம்மண்ணில் யாருக்கும் உரிமை கிடையாது என்று வீர உணர்ச்சி பொங்க, மொய்சிலிர்க்கும்
வார்த்தைகளால் நம் நாடி நரம்புகளில் சுதந்திர இரத்தத்தை பாய்ச்சிகிறார் என்பது குறிப்பிடதக்கது.

**விடுதலை வேள்வி**

**பறைய ருக்கும் இங்கு தீயர்**
**புலைய ருக்கும் விடுதலை**
**பரவ ரோட குறவருக்கும்**
**மறவ ருக்கும் விடுதலை**
**திறமை கொண்ட தீமை யற்ற**
**தொரில்பு ரிந்து யாவரும்**
**தேர்ந்த கல்வி ஞானம் எய்தி**
**வாழுவும் இந்த நாட்டிலேவிடுதலை**
**ஏழை யென்றும் அடிமை யென்றும்**
**எவனும் இல்லை ஜாதியில்,**
**இழிவு கொண்ட மனித ரென்பது**
**இந்தி யாவில் இல்லையே**
**வாழி கலவி செல்வம் எய்தி**
**மனம் கிர்ந்து கூடிய**
**மனிதர் யாரும் ஒருதி கர்ச**
**மான மாக வாழுமே**

முப்பது கோடி முகமுடியார் மெய்பபுறம் ஒன்றுடையார், செப்புமொழி பதினெட்டுடையார் எனினும் சிந்தனை ஒன்றுடையார் என்று நம் தாய்த்திருநாட்டில் எத்தனை எத்தனை சாதிகள் மதங்கள், மொழிகள் வேறாக, பிறப்பால் நாங்கள் ஒன்றே, திறமை கொண்டு நலதொழில் புரிந்து வரும் அனைவரும் ஒன்று சுதந்தர வேள்விளை முன்னொடுப்போம், ஏழை. பணக்காரர், என்றும் நிறந்தால் வேறுபட்டாலும் நாம் குணத்தால் ஒன்றுப்பட்டவர்களே என்றும் . உயர்ந்தவர் தாழ்ந்தவன், இழிவுக் கொண்ட மனிதர்கள் என்று யாரும் நம் நாட்ழல் கிடையாது அனைவரும் ஒன்று கூடி வாழ நன்மைகளை பெறுவோம்,

**ஒன்றுப்பட்டால் உண்டு வார்வு**
**நம்மில் ஒற்றுமை நிங்கில் அனைவருக்கும் தாழ்வு**

என்று மகாகவி பாரதியார் உணர்ச்சி பொங்கி பாடியதோடு, பிறப்பால், இனத்தால், மதத்தால், மொழியால் நாம் வேறுப்பட்டாலும் நாம் அனைவரும் ஒன்றே, நாம் அனைவரும் இந்நாட்டு மன்னர்கள் என்றும் நம்மில் ஒற்றுமை வளர்க்க வேண்டும் என்று திறம்பட பாடியுள்ளார் நம் மகாகவி பாரதி.

**பெண் அடிமை ஓரிப்பு பெண்களுக்கு அதிகாரமளித்தல்**

**(Women empowerment India)**

அன்று வீட்டின் விண்டே வழியாக வீதியை பார்த்த பெண்கள், இன்று பில்கேட்ஸ் விண்டேஸ் வழியாக உலகத்தை பார்க்கிறார்கள், அடுப்பு ஊதும் பெண்களுக்கு

படிப்பு எதற்கு என்ற அவநம்பிக்கையை துடைத்டிதறிந்தவர் மகாகவி பாரதியார்

என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல

**மாதர் தம்மை இழவு செய்யும்**
**மடமை யைக்கொ ளுத்துவோம்**
**வைய வாழ்வு தன்னில் எந்த**
**வகையி னும்ந மக்குளே**
**தாதர் என்ற நிலைமை மாறி**
**ஆண்க ளோடு பெண்களும்**
**சரிநி கர்ச் மான மாக**
**வாழ்வேம் இந்த நாட்ழலே**

ஆண்களோடு பெண்களும் என்டிறன்றும் சமம், பெண்களுக்கு சமமான உரிமையும், உணர்வும் கொடுக்க வேண்டும், பெண்கள் நாட்டின் கண்கள்

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

என்று கூறியதோடு, பெண்களை இழிவு படுத்தும் கலச்சாரத்தை ஒழிக்க வேண்டும், அவர்களுக்கும் இவ்வுலகத்தில் உள்ள அனைத்து சுதந்திர கனவு, கல்வியறிவு, வேலை, உரிமை, உடைமை என அனைத்து துறைகளிலும் சமமான அங்கம் வகிக்க வேண்டும் என்றால், இதைத்தான் வேறு மகான் சொன்னார், அதாவது.

**பெண் விடுதலை இன்றி**
**மண் விடுதலை இல்லை**
…………………………………….
……………………………………….
**பெண்களை துன்பப்படுத்தும்**
**கண் முடி பழக்கம் எல்லாம்**
**மண் மூடி போகட்டும்**

என்ற தத்துவத்தை முன்னெடுத்து பெண்கள் நாட்டின் கண்கள் என்ற உணர்வை உலகத்திற்கு உணர்த்தியவர் மகாகவி பாரதியார். நிறுவனத்தில் பணிபுயும் பெண்களுக்கு ஆலர்களுக்கு நிகராக பெண்களுக்கும் சம உரிமை தரவெண்டும், தரணி எங்கும் முழக்கமிட்டவர் என்பது குறிப்பிடதக்கது.

**புதுமைப்பெண்**

**ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவு லோங்கி இவ் வையம் தழைக்குமாம்**
**பூணு நல்லறத் தோடிங்குங் பெண்ணுருப்**
**போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்**
**நாணும் அச்சமும் நாட்கட்டு வேண்டுமாம்**
**ஞான நல்லறம் வீர சுதந்திரம்**
**பேணு நற்கழப் பெண்ணின் குணங்களாம்**
…………………………………………………
………………………………………………
**நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
………………………………………
**சாத்தி ரங்கள் பலபல கற்பராம்**
**சவரி யங்கள் பலபல செய்வராம்**

மேலே கண்ட வரிகளிலிருந்து பாரதி கண்ட புதுப் பெண்ணின் சிறப்புகள் நன்கு புரிகிறது. ஆண்களுக்கு இணையாக பெண்களை எண்ணும் போது

இவ்வுலகம் மேன்மேலும் அறிவில் தழைக்கும், இல்லறத்தில் நல்லறம் தழைத்து ஓங்கும் என்று சிவன் சத்தியமாக பாரதியார் கூறுவது வியப்பு, பெண் என்றால், அச்சம், நாணம் போன்ற அமைப்புகளை கொண்டதாகும் அத்தகைய சிறப்பம்சம் நமது நாட்டில் இருக்கும் பெண்களுக்கு இருப்பது மிகவும் சிறப்பாகும். அது மட்டுமல்ல வீரத்திலும் மேலேங்கி நின்று தன் பிள்ளைகளுக்கும், ஆண்களுக்கு வீரத்தை ஊட்டும் அற்றல் கொண்டவள் பெண் என்பது குறிப்பிடதக்கது. பெண்கள் எப்போதும் இறை நம்பிக்கை உடையவர்கள், ஆதலால் பேசும் வார்த்தைகள் எல்லாம் பக்தியும், பேச்சியின் முக்தியும் தென்படும் என்பது அதன் சிறப்பாகும். மேலும் சாத்திரங்கள் பலபல கற்று வாழ்க்கையை தன்னை ஆடவர்களுக்கு வேண்டிய அனைத்து சவுரியங்களை செய்வதில் பெண்கள் சிறந்தவர்கள் என்பது குறிப்பிடதக்கது.

**மூத்த போய்மைகள் யாவும் அழிப்பாரம்**
**மூடக் கட்டுக்கள் யாவுந்த தகர்ப்பாரம்**

புதுப்பெண் என்பவள் மூத்த போய்களை அக்காலத்தில் போய், புதம் போன்ற போய் கதைகளை அழித்தும், மூடக் கட்டுக்கத்தைகளை உணர்ந்து, புரிந்து அதை வாழ்விலிருந்து தகர்ப்பார் என்று மகாகவி பாரதியார் கூறுவது மிகவும் வியப்பு.

## முடிவுரை

மேலே கூறிய பாடல் வரிகளிலிருந்து மகாகவி பாரதியாரின் கனவுகள் தெளிவாக கூறப்பட்டுள்ளன, ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் கனவுகள் பாரதியின் வாழ்நாளில் இருந்தது. ஆனால் அவர் கண்ட கனவு நனவாகி கொண்டிருக்கின்றன. ஆனால் சுதந்திரம் கனவை நாம் பெற்றிருந்தாலும் இன்னும் அதை முழு பயனை அடைய முடியவில்லை, மேலும் நம் நாட்டின் அருமைகளையும் பெருமைகளையும், பெண்ணின் விடுதலைக்காக அவர் பாடிய வீர உரைகள் மற்றும் சாதி மத பேதமின்றி ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமர் என்பதும், பிறப்பால், மொழியால், மதத்தால் நாம் வேறுபட்டாலும் நாம் அனைவரும் பாரத நாட்டை சேர்ந்தவர்கள் என்று கூறி தனி ஒருவனுக்கு உணவு இல்லை என்றால் இந்த ஜகத்தினை அழிப்போம் என்று கூறும் போது பாரதி நம் நாட்டின் மீதும், மக்கள் மீதும் வைத்துள்ள அளவற்ற தேசபக்தி தெளிவாக புரிகிறது. மேலும் பெண்களை இழிவு படுத்தக்கூடாது காரணம் பெண்கள் நாட்டின் கண்கள் என்ற கேட்பாட்டை மக்களுக்கு எடுத்துரைத்தவர் மகாகவி பாரதியார் என்று குறிப்பிடதக்கது. சுதந்திரம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே திருவோம் என்றும், ஆயிரம்

உண்டுங்கு சாதி எனினும் அன்னியர் வந்தென நீதி என்று கூறி நமது ஒற்றுமையை உலகிற்கு எடுத்துரைத்தவர் மகாகவி பாரதியருக்கு நிகர் அவரே என்பது சிறிதும் ஐயமில்லை, காக்கை குருவிகள் எங்கள் சாதி என்று கூறி, மலைகள், நதிகள் எங்கள் கூட்டம் கூறும் போது இயற்கை மேல் பாரதி வைத்துள்ள அக்கரையை அவர் பாடல் வரிகளின் மூலம் காட்டலாம்.